ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

14.05.2018

මගේ අංකය / எனது இல. / My No.

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date

திருமதி. ஏ. மரியாம்பிள்ளை,
26/17 A, சஹாயமத்த வீதி,
அன்புவழிபுரம்,
திருகோணமலை.

<u>முறைப்பாட்டு இலக்கம்: **HRC / 3047/2016.**</u>

தங்களின் வேண்டுகோளுக்கு அமைய ஆணைக்குழுவின் பரிந்துரையானது தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

அம்பிகா சற்குணநாதன்,
ஆணையாளர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

**Commissioner**
Human Rights Commission of Sri Lanka
No. 14, R.A. De Mel Mawatha,
Colombo 04.

Commissioner
Human Ri[illegible] of Sri Lanka

| | | | |
|---|---|---|---|
| ප්‍රධාන කාර්යාලය / பிரதான அலுவலகம் / Head Office | 14, ආර්. ඒ. ද මෙල් මාවත, කොළඹ - 04. / 14, ஆர்.ஏ.த. மெல் மாவத்தை, கொழும்பு - 04. / 14, R. A. De Mel Mawatha, Colombo - 04. | සභාපති / தவிசாளர் / Chairperson | 011-2505451 |
| දුරකථන / தொலைபேசி / Telephone | 94 -11- 2505580/81/82 | ලේකම් / செயலாளர் / Secretary | 011-2505521 |
| ෆැක්ස් / தொலைநகல் / Fax | 011-2505541/74 | ඊමේල් / மின்னஞ்சல் / e-mail | sechrc@sltnet.lk |
| ක්ෂණික / துரித அழைப்பு / Hotline | 011-2505575 1996 | වෙබ් / இணையம் / Web | www.hrcsl.lk |

මගේ අංකය / எனது இல. / My No. | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 22.02.2018

முறைப்பாட்டாளர் : திருமதி. ஏ.மரியம்பிள்ளை
26/17 A, சஹாயமத்த வீதி,
அன்புவழிபுரம்
திருகோணமலை.

பிரதிவாதிகள் : ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம்
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை, கொழும்பு 10.

<u>முறைப்பாட்டு இலக்கம்: **HRC/3047/16**</u>

<u>முறைப்பாடு</u>

முறைப்பாட்டாளரான காலஞ்சென்ற திரு.கே.பி.மரியம்பிள்ளையின் விதவை மனைவி திருமதி. அகதம்மா மரியம்பிள்ளை தனது கணவரின் விதவை மற்றும் அனாதை சிறுவர் ஓய்வூதிய நன்கொடையிலிருந்து அவர் பெற வேண்டிய உரிமையை மறுத்துள்ள ஓய்வூதியப் பணிப்பாளரின் தீர்மானத்திற்கு எதிராக நியாயம் கோரி 2016.06.27 ஆம் திகதி மனித உரிமை ஆணைக்குழுவில் இம்முறைப்பாட்டை செய்திருக்கிறார்.

முறைப்பாட்டாளர் திரு. கே.பி.மரியம்பிள்ளை அவர்களை 1955 அக்டோபர் 29ம் திகதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சாந்த மரியாள் கெதீட்ரலில் வைத்து திருமணம் செய்து கொண்டதுடன் அவர்களுக்கு ஆறு பிள்ளைகள் இருப்பதாகவும் அவரது முறைப்பாட்டில் மேலும் குறிட்டார் .

இவருக்கு தெரிந்த அளவில் இவரது கணவர் ஒருபோதும் ஏதேனும் திருமண உறவிற்கு புறம்பாக எவ்வித உறவினை கொண்டிருந்ததில்லை என்றும் இவரே திரு.கே.பி.மரியம்பிள்ளையின் சட்டரீதியான மனைவி என்றும் கூறுகிறார்.

அவரது கணவன் தனது திருமணஞ் சார்ந்த படிநிலை பற்றிய பிரகடனத்தில் தவறான கூற்றுக்களை வழங்கியுள்ளமையை அவரது கணவர் இறந்ததன் பின்னரே தான் அறிந்து கொண்டதாக அவரது முறைப்பாட்டில் மேலும் அவர் கூறுகிறார்.

i. அவரது விதவை மற்றும் அனாதை சிறுவர் ஓய்வூதியப் படிவம் - 04 அவரது மனைவி இறந்துவிட்டதாக அவர் அறிவித்திருந்தார்.
ii. அவரது மனைவியை 1980.06.30ம் திகதி விவாரத்துச் செய்ததாக அவர் அறிவித்திருந்தார்.

முறைப்பாட்டாளர் மேலும் குறிப்பிட்டதானது கணவர், அவரது விதவை மற்றும் அனாதை சிறுவர் ஓய்வூதியப் பிரகடனத்தில் அறிவித்திருந்த இரண்டு கூற்றுக்களும் முற்றிலும் பிழையானது என்பதோடு, அவர் மன அழுத்ததில் பாதிக்கப்பட்டிருந்ததன் காரணமாக அவ்வாறு செய்திருக்கலாம் என்பதுடன் அவர் இவ்விடயங்களைப் பற்றி ஒருபோதும் ஏதாகிலும் ஆவண ரீதியான சான்றுகளை சமர்ப்பிக்காததோடு, ஓய்வூதியத் திணைக்களமும் அதற்கான சான்றுகளை பெற்றுக் கொள்ளவில்லை எனும் கருத்தையும் அவர் முன்வைக்கிறார்.

திருமணம் நிறைவேறியதை உறுதிப்படுத்துவதற்காக அவர்களது திருமண சான்றிதழையும், அதனை உறுதிபடுத்துவதற்கு தேவையான சத்தியக் கடதாசியையும் அவர் சமர்ப்பித்துள்ளதாக முறைப்பாட்டாளர் மேலும் கூறுகிறார்.

ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் அவர்களிடமிருந்து 2016.09.09ம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழு இது தொடர்பான கருத்தறிவிப்புக் கோரியதோடு, 2017.06.20ம் திகதி இது தொடர்பாக நடைபெறும் விசாரணைக்கு இரண்டு தரப்பினருக்கும் ஆணைக்குழுவின் முன் தோன்றுமாறு ஆணைக்குழு அழைப்பு விடுத்தது.

2017.06.20ம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நடைபெற்ற விசாரணைக்கு முறைப்பாட்டாளரும் ஓய்வூதியத் திணைக்களத்தின் சட்ட அதிகாரி திருமதி.ஆர்.எம்.டப்ளியு.கே.ரத்னாயக்கா அவர்களும் சமூகமளித்தனர்.

முறைப்பாட்டாளர் 1955ம் ஆண்டு திருமணஞ் செய்ததாகவும், 1960ல் அவரது கணவருக்கு ஆசிரியர் நியமனம் கிடைத்ததாகவும், அதுவரை கணவர் தொழிலின்றி இருந்ததாகவும், அக்காலத்தில் அவர் குடும்பத்திற்காக உழைப்பவராக இருந்தாரெனவும் கூறினார்.

தன்னை 1980.06.30ம் திகதி விவாகரத்துச் செய்ததாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு 1981.11.19ம் திகதி அவரது கணவரால் அறிவிக்கப்பட்டிருந்த ஆவணத்திற்கு ஏற்புடையதாக அதை நிருபிக்கக் கூடிய ஏதாகிலும் ஆவணச் சான்றுகள் அவர் சமர்ப்பித்திருக்கவில்லை.

<u>பிரதிவாதியின் கூற்று</u>

முறைப்பாட்டாளரின் கணவர் திரு.கப்ரியேல் மரியம்பிள்ளை 1981.11.19ம் திகதியிடப்பட்ட விதவை மற்றும் அனாதைச் சிறுவர் ஓய்வூதியப் படிவத்தை வலயக் கல்வி அதிகாரி மூலமாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்திருந்தாரென விசாரணையின் போது பிரதிவாதியின் சட்ட அதிகாரி தெரிவித்தார். மேற்கூறப்பட்டுள்ள அவரது விண்ணப்பப் படிவத்தில் அவரது மனைவியை (முறைப்பாட்டாளரை) 1980.06.30ம் திகதி அவர் விவாகரத்து செய்திருப்பதாகவும் திரு. கப்ரியேல் மரியம்பிள்ளை குறிப்பிட்டிருக்கிறார். முறைப்பாட்டாளரும் அவரது கணவரும் நீண்ட காலமாக தொடர்ச்சியாக வெவ்வேறாக தனித்து வாழ்ந்து வந்தார்கள் என்பதுடன் மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் முறைப்பாட்டாளரும் அவரது கணவரும் ஒன்றாக வாழவில்லை என்பது அவர்கள் விவாகரத்தானவர்கள் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது என சட்ட அதிகாரி மேலும் கூறினார்.

<u>முடிவு</u>

- முறைப்பாட்டாளர் திரு. கே.பி.மரியம்பிள்ளை அவர்களை 1955ம் ஆண்டு திருமணஞ் செய்துள்ளார்.
- திரு.மரியம்பிள்ளை 1960ம் ஆண்டு ஆசிரிய நியமனம் பெற்று யாழ்ப்பாண வலயக் கல்விக் கரியாலய பிரிவினுள் வேலை செய்திருக்கிறார்.
- திரு.மரியம்பிள்ளை விதவை மற்றும் அனாதை சிறுவர் நிதியத்திற்கு நிதிப் பங்களிப்பு வழங்கியுள்ளார்.

- திரு.மரியம்பிள்ளை 2013ம் ஆண்டு இறந்ததன் பின்னர் திரு.மரியம்பிள்ளையின் மனைவி திருமதி.அகதம்மா மரியம்பிள்ளை உரிய ஆவணங்களுடன் விதவை மற்றும் அனாதை சிறுவர் ஓய்வு+திய நிதியத்தை பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளார்.
- திரு.மரியம்பிள்ளையால் 1981.11.19ம் திகதியிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட விதவை மற்றும் அனாதை சிறுவர் ஓய்வ+திய விண்ணப்பத்தின் படி திரு. மரியம்பிள்ளை முறைப்பாட்டாளரை 1980.06.30ம் திகதி விவாகரத்துச் செய்திருப்பது அறிந்துகொள்ளக் கிடைத்திருப்பதால் விதவை மற்றும் அனாதை சிறுவர் ஓய்வ+திய நிதியத்திற்கு அனுப்பபட்ட விண்ணப்பம் ஓய்வ+திய பணிப்பாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.
- திரு.மரியம்பிள்ளை விவாகரத்துச் சான்றிதழையோ அல்லது ஏதாகிலும் ஏனைய ஆவணச் சான்றுகளையோ சமர்ப்பித்திருக்காத நிலையில், முறைப்பாட்டாளரும் முரண்பாடான சூழ்நிலைகளை தெளிவாக அறிந்திருக்காததால் திருமதி. மாரியம்பிள்ளையின் நிலையை கவனத்திற் கொள்ளும்போது அவருக்கு விவாகரத்தொன்று நடைபெறவில்லை.

பரிந்துரை

மேற்குறிப்பிட்டுள்ள விடயத்தை கருத்திற் கொள்ளும்போது, முறைப்பாட்டாளரான திரு.கே.பி.மரியம்பிள்ளையின் விதவை என்பது நிரூபிக்கப்படுவதால் 2013ம் ஆண்டு அவரது கணவர் மரணித்ததன் பின்னர் அவர் சட்டரீதியாக விதவை மற்றும் அனாதை சிறுவர் ஓய்வு+தியத்திற்கு உரிமையுடையவராவார். முறைப்பாட்டாளரின் கணவர் அவரை விவாகரத்து செய்துள்ளேன் என வலியுறுத்தியிருந்தாலும், விவாகரத்தொன்று நடைபெறவில்லை என அவள் வலியுறுத்திக் கூறுகின்ற நிலையில் திருமணச் சான்றிதழ் மற்றும் சத்தியக் கடதாசியுடன் உரிய முறையில் சமர்ப்பிக்கப்பட்ட விதவை மற்றும் ஓய்வ+திய விண்ணப்பத்தை ஓய்வு+திய திணைக்கள அதிகாரிகள் கவனத்திற் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். விவாகரத்து நிறைவேறியமைப் பற்றிய ஆவண ரீதியான சான்றுகள் இல்லாதவிடத்து முறைப்பாட்டாளரின் விதவை மற்றும் அனாதை சிறுவர் ஓய்வ+தியத்தை மறுப்பது ஒரு நியாயமற்ற செயலாகும். ஆகையால், குறிப்பட்ட மறுப்பு அரசியலமைப்பின் உறுப்பரை 12(1)இனை மீறியதாக அமைந்துள்ளது.

முறைப்பாட்டாளருக்கு விதவை மற்றும் அனாதை சிறுவர் ஓய்வ+தியத்தை நிலுவையுடன் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரை செய்யப்படுகிறது.

ஆணையாளர்,
இலங்கை மனித உரிமைகள் அணைக்குழு.

ஆணையாளர்,
இலங்கை மனித உரிமைகள் அணைக்குழு.